# இறுதி ஏற்பாடு

★

ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரி

வெளியிடுவோர்:
சர்வமத சங்கம்

வடமாகாணக்கிளை — புங்குடுதீவு.

[illegible]

[illegible]

ஓம்

# ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரியும் சர்வமத சங்கமும்

ஆறுமுகநாவலருக்கும் இராமலிங்க சுவாமிகளுக்குமிடையே நடந்த சமயத்தகராறு தமிழர்களையும் சைவர்களையும் பொறுத்தவரையில் இதுவரையில் சிராகத் தீர்த்து முடிவுகட்டப்படாத விசயமாகவே இருந்து வருகிறது. பெரும்பாலான சைவத் தமிழர்கள் இராமலிங்கசுவாமிகளின் அருட்பாவை மருட்பாவெனத் தீர்ப்புக்கட்டி ஒதுக்கிவிட்டபோதிலும் இன்றுங்கூட அதைப் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்து எழுந்தவண்ணமாகவே இருக்கின்றன.

ஆறுமுகநாவலரின் போக்குச் சரியானதா? இராமலிங்கசுவாமிகளின் போக்குச் சரியானதா?

இதற்கு முடிவுகட்டவேண்டுமானால் இந்த இரண்டு பெரியார்களின்போக்கும் எவையெவற்றை இலட்சியமாகக் கொண்டிருந்தன என்பதை ஆராயவேண்டும். அப்படி ஆராயும்போது அவர்கள் இருவருக்குமிடையே ஏற்பட்ட தகராறு தமிழர்களையும் சைவர்களையும் பொறுத்தளவோடு நிற்கும் தகராருகவும் பிரச்சனையாகவும் இருக்காமல் முழு உலக மக்களுக்கும் எல்லாச் சமயத்தினருக்கும் உரிய பிரச்சனையாக இன்று மாறுவதை அவதானிக்கநேரிடும்.

ஆறுமுகநாவலர் பெரும் பக்திமான்; ஆனால் அவரது பக்தியோ சமய எல்லைகளைக் கடக்காது அவற்றுக்கு உட்பட்டதாகவே இருந்தது. அவர் தன்னை ஓர் சைவராகவே கண்டார். சைவமே அவரது உயிர் எனலாம்; அவர் சைவத்தை வளர்த்தார்; பிறசமயங்களின் தாக்குதல்களிலிருந்து அதைப் பேணிக் காப்பதே அவரது சமயத் தொண்டாக இருந்தது. தமிழை வளர்த்த பெரியார்களில் ஆறுமுகநாவலரும் ஒருவர்; ஆனால் அவரது தமிழ்ப்பற்றுங்கூட அவரது சைவப்பற்றின் ஓர் அம்சமாகவே இருந்தது. சமூகசிர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் எந்தவொரு அடிப்படையான வளர்ச்சி மாற்றத்தையும் அவர் சாதித்ததில்லை; உதாரணமாக அவரது சைவப்பற்று சமூகத்தின் சாதிப்பாகுபாட்டைச் சாடக்கூடியதாய் இருக்கவில்லை; மாருக அதை ஆமோதிப்பதாகவே இருந்தது.

இராமலிங்கசுவாமிகள் பெரும் பக்திமானுக இருந்ததோடு சமய எல்லைகளைத் தாண்டிய ஞானியாகவும் இருந்தார், தாயு

மானவரின் ஞானப்போக்குக்குரிய வாரிசாகவும் வளர்ச்சியாகவும் அவர் விளங்கினுர் என்று கூடச் சொல்லலாம். அவர் ''சைவம்'' என்ற தனிப்பட்ட ஓர் சமயத்துக்குள் தன்னை அடைத்துக்கொள்ளவில்லை; எல்லாச்சமயங்களும் ஒரே உண்மையைப் பற்றியே கூறுகின்றன என்பதை உணர்ந்த அனுபூதிமாஞகவும் எல்லாச்சமயங்களையும் ஏற்றுக்கொண்ட ஓர் சர்வசமய ஞானியாகவும் அவர் விளங்கினுர்; ஓர் தனிப்பட்ட சமயத்துக்குரிய உருவவழிபாட்டை அழுத்தாமல் எல்லாச்சமயங்களுக்குமுரிய பொதுவழிபாடாக ஜோதிவழிபாட்டை ஆரம்பித்துவைத்ததுடன் உருவங்களைக் கடந்து செல்லும்போக்கையே உண்மையான ஞானப்போக்காகவும் போதித்தார். சமயத்தில் காட்டிய அக்கறைக்குச் சமமாக, சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் களைவதிலும் அவர் அக்கறை காட்டினுர்.

இவற்றுள் எந்தப்போக்கு அருட்போக்கு எந்தப் போக்கு மருட்போக்கு?

உண்மையான ஞான அடிப்படையில் சரி, பிழை என்பவை கிடையா. அந்த வகையில் பார்க்கும்போது இரு பெரும் சமயப் பெரியார்களின் செயல்களைச் சரி. பிழை என்றரீதியில் பார்ப்பது அழகல்ல. இருவரது செயல்களையும் அவர்கள் மூலம் இறைவனே சாதித்துள்ளார் என்பதே உண்மையாகும். ஆனுல் இவற்றுள் எது எதிர்கால வளர்ச்சிக்குரியது எது உரியதல்ல, எது எதிர்கால வளர்ச்சியின் திசையைக்காட்டுகிறது எது காட்டவில்லை, எது உலகம் முழுதுக்கும் உரியது, எது உரியதல்ல என்பவற்றை இந்த நாமருப எல்லைக்குட்பட்ட நிலையில் நிச்சயமாகச் சொல்லலாம். அவற்றின் அடிப்படையிலேயே சரி, பிழை என்பவற்றைக் கணிக்கலாம்.

ஆறுமுகநாவலரின் சாதனை அன்று வென்றது. ஆனுல் இன்றும் இனிவரும் எதிர்காலத்திலும் வெல்லப் போவதாக இராமலிங்க சுவாமிகளின் சர்வசமயப் போக்கு நிற்கிறது. அதுவே முழு உலகமக்களுக்கும் உரியஞானப் போக்காகவும் விளங்குகிறது. அதனுல் அதுவே இன்று சரியான போக்காக நிற்கிறது.

வேதஉபநிடதகால ரிஷீகளும் புத்தரும், யேசுவும், முகம்மதுவும் அந்தந்தக் காலத்துக்கும் புவியியல், சமூகச் சூழலுக்கும் ஏற்றவகையில் பரம்பொருளை பலபல கோணங்களில் விளக்கிச் சென்றனர். அண்மையில் வாழ்ந்த இராமகிருஷ்ணரோ அவை எல்லாவற்றையும் இணைத்து ஒன்ருகக் காட்டிச் சென்ருர். காரணம் சர்வசமயஞானத்தை ஏற்றுக் கொள்ளுமளவு

வுக்குமனிதகுலம் இன்று ஒற்றுமைப்பட்டு விட்டது; மனிதமன மும் அதற்கேற்றவகையில் வளர்ச்சியடைந்து விட்டது. இராம கிருஷ்ணருக்குப்பின் வாழ்ந்த இரமணமகரிஷியும் அரவிந்தரும் அதே சர்வசமய ஞானப்போக்கையே வளர்த்துச் சென்றுள் ளனர். ரமணரும் அரவிந்தரும் தமிழ்நாட்டிலே வாழ்ந்தவர்கள் முந்திய இராமலிங்க சுவாமிகளின் ஞானப்போக்கின் முதிர்ந்த வாரிசுகளாக அவர்கள் விளங்குகின்றனர். அதேபோல் இது வரை வளர்ந்துள்ள சமயப்போக்கினதும் ஆத்மீக எழுச்சியின தும் இந்த யுகத்துக்குரிய இறுதி உச்சமாக ஸ்ரீலஸ்ரீ நந்த கோபாலகிரி விளங்குகின்றார், இந்தக் கலியுகம் முடிந்து கிருத அல்லது சத்திய யுகம் தோன்றுவதற்கு வழிவகுக்கும் பேர் அவதாரமாக அவர்விளங்குகிறார். அவர் அண்மையிலேயே மகா சமாதி யடைந்தார். அவர் எழுதிவிட்டுச் சென்ற இந்த "இறுதி ஏற்பாடு" என்னும் கட்டுரையை அவர் ஸ்தாபித்த சர்வமத சங்கத்தின் முக்கிய வெளியீடுகளில் ஒன்றாகப் பிரசுரித்து வெளியிடுவதில் நாம் பெருமகிழ்வு கொள்கிறோம்.

இந்த ஏற்பாட்டின்படி இந்துசமயத்தினதும் பிற சமயங்க ளினதும் வழிபாட்டுமுறையில் பல அடிப்படையான மாற்றங் கள் ஏற்படவேண்டிவரும். அந்த வளர்ச்சி மாற்றங்களே இனி எழவிருக்கும் சத்தியயுகத்துக்குரிய தயாரிப்பாகவும் இருக்கும்.

ஆனால் ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரியை ஆறுமுகநாவலர் அல் லது இராமலிங்கசுவாமிகள் போன்ற சாதாரண ஒரு பக்தி மானாக அல்லது அனுபூதிமானாக அல்லது ஜீவன்முக்தனாகக் கொள்ளக்கூடாது.

ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரி போன்ற பேர்ஞானிகளின் வெளிக்காட்டலை வெறும் சட உருவத்தின் வெளிக்காட்டலா கவோ வருகையாகவோ மாறாட்டம் செய்யக்கூடாது. அவர்கள் உடல் மனம் ஆகிய நாமரூபங்களைத் தாண்டிய பேர்ஞான சொரூபிகளாக இருப்பதால் பேர்ஞானத்தின் வெளிக்காட்டல் களாகவே அவர்களைக் கொள்ளவேண்டும். என்றும் இருக்கும் பேருண்மையின் வெளிக்காட்டல்கள். அந்த வெளிக்காட்டல்கள் அந்தந்தக் காலத்தின் முழுச்சமூக வாழ்க்கை அமைப்பையுமே மாற்றியமைக்க ஏற்படும் ஞானக் கொள்கை வெளிக்காட்டல் களாகும். தர்மம் குன்றி அதர்மம் ஓங்கும்போது அடுத்தகட் டத் தர்மவளர்ச்சிக்காக ஏற்படும் பேர்ஞானத்தின் இறக்கங் களாகும்; அத்தகைய பேர்ஞானத்தினதும் பேருண்மையினதும் இன்றைய வெளிக்காட்டலே ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரி எனப் படும் பெருங்கருத்தாகும். அது இன்று எங்கும் வந்துகொண்டி ருக்கிறது, பரவிக்கொண்டிருக்கிறது. அதை வேகமாகவும் ஆழ

மாகவும் பரவலாகவும் எங்கும் பரப்புவதற்கு ஏற்கனவே இரண்டு இடங்களில் சங்க நிலையங்கள் வேகமாக நிறுவப்பட்டு விட்டன என்பதையும், எதற்கும் தயாரான சீடர்கள் அவற்றை நடத்தத் தயாராகியுள்ளனர் என்பதையும் அறிந்து விசயந் தெரிந்தவர்கள் பேர் மகிழ்வு கொள்ளலாம். சர்வமதசங்கம் ஸ்ரீலஸ்ரீ நந்தகோபாலகிரியின் உருவ வழிபாட்டையோ தலைவர் வழி பாட்டையோ பரப்பப்போவதில்லை. பரப்பப்படவிருப்பவை பேர்ஞா னக் கொள்கையும் அதற்குரிய ஞான வழிபாடுமேயாகும். சர் வமதங்களின் ஒருமையையும் அவற்றின் அடிப்படையில் சமூகத் தின் சகல துறைகளிலும் சகலரிடத்திலும் ஏற்படக்கூடிய சமத் துவத்தையும் ஞான எழுச்சியையும் பரப்புவதே சர்வமதசங்கத் தின் பணியாகவிருக்கும்.

இரு இடங்களில் இப்பொழுது சர்வமதசங்கத்தின் நிலையங் கள் வெளிப்படையாகச் செயல்படவும் தொடங்கியுள்ளன. தலைமை நிலையம் ராஜகிரியில் இருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ நந்தகோ பாலகிரியின் சீடர்களில் பிரதானமானவரும், 'அன்னை என அழைக்கப்படுபவருமான திருமதி கமலா திருநாவுக்கரசு அதற் குப் பொறுப்பாகவிருக்கிறார். வடமாகாணத்துக்குரிய பொது நிலையம் புங்குடுதீவில் இருக்கிறது. சர்வமதசங்கம் சந்தாப்ப ணம், நிதியுதவி எதையும் கோராமல் ஞானவிழிப்பையே கோருகிறது.

— ந. விநாயகதாஸ்

## இறுதி ஏற்பாடு

காலங்களும் நிலையும் இயற்கையும் மாறும்போது உண்மை யாகவே நாமும் நம் கொள்கைகளும் மாறியாகவேண்டும். இல்லையென்றால் நாம் அந்தச் சூழ்நிலையில் சீவிப்பது கஷ்டம், இதைத்தான் யுகமாற்றம் என்கிறோம். இந்துக்களின் ஆசாரப்படி கலிக்குப்பின் வருவது கிருதயுகம் என்பது ஐதீகம். அப்படியானால் இக்கிருதயுகத்தில் கோவில்களோ, திருவிழாக்களோ, காணிக்கைகளோ இருக்கப்போவதில்லை. எல்லோரும் சமவெளியில் ஒன்றி மானசீகமாக இறைவனைப் பிரார்த்திப்பார்கள். அவன் உடனே அவர் அவர் நினைவுக்கு உகந்தவாறு காட்சியாகி தேவையைப் பூர்த்தி செய்வான்.

இந்நிலையில் நாம் இன்றைய காலத்தையும் தற்போதைய மக்கள் தேச சூழ்நிலையையும் உற்றுப் பார்க்கும்போது எங்கள் தெய்வ வழிபாட்டில் இன்னும் பழைய கண்மூடித்தனத்தையே காண்கிறோம். இவற்றை நாம் நல்ல சீரான முறைக்குக் கொண்டுவரக்கூடாதா? தெய்வ வழிபாடு என்ற போர்வையில் 'அது இது' என்று பயமுறுத்தி பணத்தையும் நேரத்தையும் பறித்து ஏமாற்றுவேலை செய்பவர்களைப் பார்த்துக்கொண்டு இன்னும் நாம் பயந்தாங்கொள்ளிகளாக இருப்பதா? அப்படி இருப்பதால் ஒரு சில தனிப்பட்ட சுயநலக்கார முதலாளி வர்க்கத்தினர் பணமூட்டைகளாகுவதையே பார்த்துக்கொண்டிருக்கிறோம். இது கண்ணிருந்தும் குருடரர்ய் இருப்பதற்கு ஒப்பான செயல் அல்லவா?

ஆத்மீகம் என்று கூறிக்கொண்டு கோயிலுக்கு கும்பாபிஷேகம், சுவாமிக்கு நீராட்டு, ஊஞ்சல், திருவிழா, திருக்கல்யாணம் போன்றவற்றை ஏன் கோவிலில் வைக்கிறார்கள்? இதனால் மக்களுக்கு என்ன பலன் ஏற்படுகிறது? உண்மையாகவே இன்று சுவாமி காட்சி தருகிறாரா? அதே நேரத்தில் மக்களும் உண்மையாகவே பக்தியுடன்தான் கோவிலுக்குப் போகிறார்களா? இல்லை. தங்கள் உடையையும் நகையையும் காட்டப் போய், தாம் சில நாட்களாகத் தேடிவைத்திருந்த பணத்தை அர்ச்சனைக்கும் அங்குள்ள கடைகளுக்கும் சிலவேளை திருடருக்கும் கொடுத்துவிட்டு வீடு திரும்புவதுதான் அவர்கள் கண்ட பலன். இவற்றை நாம் ஒவ்வொரு திருவிழாக்களிலும் பார்க்கிறோம். இவைபற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம். இப்படி நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்வதால் இறைவனை அடையவோ அல்லது அநுக்கிரகம் பெறறவோ

முடியுமானல் இன்று எல்லோருக்கும் அது எளிதில் கிட்டியிருக்குமல்லவா? அன்று சுவாமி விவேகானந்தர் சொன்னதுபோல் மரக்கறி மாத்திரம் தின்று மனிதன் முத்தி அடையலாம் என்ருல் இந்தப் பசுக்கள் மிருகங்கள் எல்லாம் எப்பவோ முக்தி அடைந்திருக்க வேண்டுமல்லவா? இந்தப் பிராமணன் உங்களுக்கு அர்ச்சனை செய்தவுடன் உங்கள்மீது இறைவன் கருணை வருமென்ருல் அவன் சதாசொல்லிக்கொண்டிருக்கும் அவன் நிலையைப் போய்ப் பாருங்கள். இந்தச் சடங்கு செய்ய வேண்டும் அந்தச் சடங்கு செய்ய வேண்டும் என்று சதா உங்கள் காலைச் சுற்றி வருவதும் இந்த ஐயா நல்லாய்ச் செய்கிருர் அந்த முதலாளி நல்லாய்ச் செய்கிருர் என்று அவன் சொல்லித் திரிவதும் எதற்கு? சதா உங்களால் பணம் வரவேண்டுமே என்னும் ஆசையே சொல்லும் சிந்தனையுமாய் இருக்கும் இந்தப் பிராமணரும் குருமாரும் உங்கள் பணத்திலேயே கண் வைத்திருக்கும் முதலாளிப் பெருச்சாளிகளே யன்றி, ஆத்மீகத்தின் காவலரோ உண்மையான ஆண்டவனின் தொண்டரோ அல்லர். இவர்கள் வெறும் ஆசையின் முதலாளிகள், மும்மலங்களால் பிணிக்கப்பட்டவர்கள். இந்தப் பிராமணரும் குருமாரும் மக்களைச் சுரண்டி வாழும் முதலாளிமார்கள் வளர்த்துவிடும் பெருச்சாளிகள்தான். இத்தகைய பத்தாம் பசலிகளை நாம் தொந்தி கொழுக்க வைப்பது – அதுவும் நாம் கண்ணீர் விட்டு வேர்வை சிந்த தேடிய பணத்தைக் கொண்டுபோய் கொடுத்து– தொந்தி கொழுக்க வைப்பது நியாயமா? இதைத் திருப்பணி என்று சொல்லலாமா?

எங்கும் நிறைந்த அந்தப்பரம் பொருள் ஒன்றே. அந்தப்பரம் பொருளை, இதய சுத்தியோடும், அந்தப்பரம் பொருளின் அன்பொன்றிற்காக நமது எல்லாவித சுகங்களையும் சொத்துக்களையும் இழக்கத் தயாரான மனத்துணிவோடும் வழிபடுவதே உண்மையான இறைவழிபாடாகும்; அந்தத் துணிவே உண்மையான துறவாகும்.

ஆகவே உண்மையான இறைவழிபாட்டுக்கு காசு வேண்டுமா? திருவிழாக்கள் என்று நேரமும் சிரமமும் வீணுக்குவது சரியா? திருப்பணி என்ற பேரில் இன்னும் நாம் மூலைக்கு மூலை கோவில்களைக் கட்டி எழுப்புவது சரியா? அவற்றுக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு ஆயிரம் ஏழைகள் வாழ வழிவகுப்பது இன்று நாம் செய்யும் அதிஉன்னத திருப்பணி ஆகாதா? எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கு இனியும் ஒரு தனிக்கோயில் வேண்டுமா? அங்குள்ள ரூபங்களை தெய்வமென நினைத்துப் பூசிப்பதைப் பார்க்கிலும் அந்த எங்கும் எதுவு

மாய் நிறைந்த பொருளை மனதில் வைத்து அதில் நாம் சொற்ப நேரம் நிலைத்து நிற்பது சரியல்லவா? அப்படியானால் ஒருவனே தலைவன், ஒருவனே கடவுள் என்பதும் சரியல்லவா? எல்லாச் சமயங்கள் கூறும் கடவுளும் ஒரு கடவுளல்லவா? மதங்களுக்கிடையே உள்ள வேற்றுமை ஆணவத்துக்குட்பட்ட நமது மனதின் வேற்றுமை அன்றி கடவுளின் வேற்றுமை ஆகாதல்லவா? எனவே ஒரு கடவுளை எல்லோரும் ஒன்று கூடித் தியானித்து அதன் அடிப்படையில் எழும் இணக்குமுறையில் நமது சுகதுக்கங்களை அணுகுவதும் நமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதும் அவசியமாகிறதல்லவா? இதுவே எதிர்காலத்தின் வழியும் ஆகிறதல்லவா?

காலங்களும் நிலையும் இயற்கையும் மாறும்போது உண்மையாகவே நாமும் நம் கொள்கைகளும் மாறியாக வேண்டும்.

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.